# திருக்குறளில் அகமரபுச் சிந்தனைகள் வெளிப்படும் விதம்

**OPEN ACCESS**

Volume: 13

Special Issue: 5

Month: March

Year: 2026

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

Citation:
*மெர்சி கிரேஸ், ஜெ. திருக்குறளில் அகமரபுச் சிந்தனைகள் வெளிப்படும் விதம். Shanlax International Journal of Arts Science and Humanities*, Vol. 13, no. S1, 2026, pp. 119-27.

*Corresponding Author:
mercygrace28052000@gmail.com

DOI:
https://doi.org/10.34293/sijash.v13iS5-Mar.11102

***ஜெ. மெர்சி கிரேஸ்***
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ் உயர் ஆய்வு மையம்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை
&
உதவிப் பேராசிரியர்
சி. எஸ். ஐ. பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மதுரை

***ஆய்வுச்சுருக்கம்***
*இக்கட்டுரை திருக்குறளின் காமத்துப்பாலில் வெளிப்படும் அகமரபுச் சிந்தனைகளை சங்க இலக்கிய அகத்திணை மரபுடன் இணைத்து ஆய்வு செய்கிறது. கூடல், பிரிதல், பொறுத்திருத்தல், வருந்தல் மற்றும் ஊடல் ஆகிய அக இலக்கிய அடிப்படை கூறுகள் திருக்குறளில் எவ்வாறு அமைப்பாக வெளிப்படுகின்றன என்பது இவ்வாய்வின் மையப்பொருளாகும். திருவள்ளுவர் சங்க இலக்கிய மரபை ஏற்றுக்கொள்வதோடு மட்டுமல்லாமல், அதனை அறநெறி மற்றும் மனிதநேய உளவியல் பார்வையில் மறுவடிவமைத்துள்ளார் என்பது இவ்வாய்வின் கருதுகோள். மேலும், காமத்துப்பாலில் வெளிப்படும் பெண்ணின் உணர்ச்சி வெளிப்பாடு மற்றும் சமூக ஒழுக்கம் நவீன உளவியல் கோட்பாடுகளுடன் ஒப்பிட்டு விளக்கப்படுகிறது. இதன் மூலம் திருக்குறள் மனித உறவுகளின் உளவியல் மற்றும் சமூக அமைப்பை ஒருங்கிணைக்கும் தத்துவ நூலாக விளங்குகிறது என்பது உறுதியாகிறது.*
***சுருக்க குறியீட்டு:*** *தொல்-தொல்காப்பியம், குறள்-திருக்குறள், அக. வி-அகப்பொருள் விளக்கம், நா.ந- நாற்கவிராச நம்பி, நூற்- நூற்பா, ப. எண்- பக்கம் எண்.*

## அறிமுகம், நோக்கங்கள் மற்றும் ஆய்வு முறையியல்

திருக்குறள் உலகளாவிய அறநூலாகப் போற்றப்படுகிறது. முப்பால் அமைப்பில், இன்பத்துப்பால் மனித வாழ்க்கையின் காதல் மற்றும் இல்லற உணர்வுகளை ஆழமாக வெளிப்படுத்துகிறது. சங்க இலக்கிய அகத்திணை மரபின் தொடர்ச்சியாக திருக்குறள் அமைந்துள்ளதா என்பது ஆய்வுச் சிந்தனைக்குரிய முக்கியமான விடயமாகும். குறிப்பாக, காமத்துப் பாலில் வெளிப்படும் காதல் அனுபவங்கள் அக இலக்கிய மரபின் தொடர்ச்சியாகக் காணப்படுகின்றன. இவ்வாய்வு, திருக்குறளில் அகமரபுச் சிந்தனைகளின் அமைப்பை ஆராய்வதையும், சங்க இலக்கிய அகத்திணை மரபுடன் ஒப்பீடு செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், காமத்துப் பாலில் வெளிப்படும் மனித உணர்வுகளை உளவியல் நோக்கில் விளக்கி, பெண்ணியப் பார்வையில் திருக்குறளின் காதல் சிந்தனைகளை மதிப்பீடு செய்வதையும் இவ்வாய்வு முன்வைக்கிறது. இவ்வாய்வு

விளக்க மற்றும் பகுப்பாய்வு முறைகளை (Descriptive Analytical methods) அடிப்படையாகக் கொண்டதாகும். திருக்குறளின் காமத்துப்பால் குறள்கள், தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கிய அகப்பொருள் நூல்கள் ஒப்பீட்டு அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மேலும், கலைஞர் உரை மற்றும் அகப்பொருள் விளக்க நூல்கள் துணை ஆதாரங்களாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வுரை**

கூடல்: தலைவனும் தலைவியும் குறிப்பிட்ட இடத்தில் சந்திக்கும் நிகழ்வு கூடல் எனப்படுகிறது. இது சங்க இலக்கிய அகமரபில் முக்கியமான ஒரு காதல் நிகழ்வாகும். இதனை

**கூட்டல், கூடல், பாங்கிற் கூட்டல்**
**வேட்டல் என்று ஒரு நல்வகைத்தே பகற்குறி**[1]

(அகப்பொருள் விளக்கம் - நாற்கவிராச நம்பி, நூற்பா 151) என்று அகப்பொருள் விளக்கம் வகைப்படுத்துகிறது. இவ்வகைப்பாடு, பகற்குறி வழியாக நடைபெறும் காதல் சந்திப்புகளின் இயல்பை தெளிவாக எடுத்துரைக்கிறது. திருக்குறளிலும் இத்தகைய அகமரபுச் சிந்தனைகள் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் வெளிப்படுகின்றன. குறிப்பாக, காமத்துப்பாலின் முதல் ஐந்து அதிகாரங்கள்-தகை அணங்குறுத்தல், குறிப்பறிதல், புணர்ச்சி மகிழ்தல், நலம் புனைந்து உரைத்தல், காதற் சிறப்புரைத்தல் ஆகியவை-கூடல் நிகழ்வின் வளர்ச்சிக் கட்டங்களை பிரதிபலிக்கின்றன. இதில் தலைவன் முதலில் தலைவியின் அழகை வர்ணித்து மனநிலையை உருவாக்குகிறான்; பின்னர் அவளின் கண் மொழி மற்றும் உணர்ச்சி குறிப்புகளைப் புரிந்துகொண்டு அவளின் சம்மதத்தை அறிகிறான். அதனைத் தொடர்ந்து இருவரும் இணைந்து புணர்ச்சி மகிழ்வை அனுபவிக்கின்றனர்; பின்னர் ஒருவரையொருவர் ரசித்து உரையாடி, காதலின் சிறப்பை வெளிப்படுத்துகின்றனர். இவ்வாறு குறிப்பறிதல் அதிகாரத்திற்குப் பிறகு புணர்ச்சி மகிழ்தல் அதிகாரம் அமைவது, சங்க இலக்கிய அகமரபின் இயல்பான தொடர்ச்சியை வள்ளுவர் பின்பற்றியிருப்பதை தெளிவுபடுத்துகிறது.

**பிரிதல்**

கூடல் நிகழ்விற்குப் பின் அகமரபில் அடுத்த முக்கியமான நிலை பிரிதல் ஆகும். இது தலைவனும் தலைவியும் உடல் மற்றும் மனதளவில் பிரிந்திருக்கும் சூழலைக் குறிக்கிறது. இந்நிலையில் தோன்றும் உணர்வுகள் திருக்குறளின் காமத்துப்பாலில் அடுத்த ஐந்து அதிகாரங்களாக விரிவாக அமைக்கப் பட்டுள்ளன. அவை நாணுத் துறவுரைத்தல் (மடல் ஏறும் மனநிலை), அலர் அறிவுறுத்தல் (ஊராரின் நிந்தனை), பிரிவு ஆற்றாமை (தலைவனின் பிரிவால் ஏற்பட்ட அச்சம்), படர்மெலிந்திரங்கல் (பிரிவால் ஏற்படும் ஆழ்ந்த வேதனை), மற்றும் கண் விதுப்பழிதல் (தலைவியின் கண்ணீரை வெளிப்படுத்தல்) ஆகியவையாகும். இவ்வதிகாரங்கள் அனைத்தும் பிரிவால் ஏற்படும் மனஉளைச்சலின் பல்வேறு நிலைகளை கட்டமைப்பாக வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக, தலைவனின் பிரிவுக்குப் பிறகு தலைவி தூக்கமின்றி துயரத்தில் துவளும் நிலை, அவளது மனஅமைதி சிதைந்து அச்சமும் வேதனையும் ஒருங்கே தோன்றும் மனநிலையாகக் காட்டப்படுகிறது. வள்ளுவர் இவ்வகை குறள்களில், காதல் என்பது இன்ப அனுபவம் மட்டுமல்லாது, பிரிவு எனும் துயரத்தையும் ஆழமாக அனுபவிக்கும் மனித உணர்வாகும் என்பதை நுட்பமாக வெளிப்படுத்துகிறார். இதன் மூலம் அகமரபின் பிரிதல் நிலை மனித மனவியல் உணர்வுகளுடன் இணைந்த ஒரு முக்கியமான இலக்கியக் கட்டமாக அமைந்துள்ளது.

**பொறுத்திருத்தல்**

கூடல் மற்றும் பிரிதல் நிலைகளுக்குப் பின் அகமரபில் முக்கியமான கட்டமாக பொறுத்திருத்தல் அமைகிறது. இந்நிலையில், தலைவனின் பிரிவால் மனமும் உடலும் பாதிக்கப்பட்ட தலைவி, அவனின் வரவை எதிர்நோக்கி ஆழ்ந்த காத்திருப்பில் இருப்பாள். தலைவனின் வரவு நீட்டிப்பால்

*அவளது உடல் மெலிதல், தூக்கமின்மை, நோய்த் தன்மை ஆகியவை உருவாகின்றன. இத்தகைய மனஉணர்வுகள் திருக்குறளின் காமத்துப்பாலில் பசப்புறு பருவரல் (பசலை நோய் தோன்றுதல்), தனிப்படர் மிகுதி (தனிமையால் ஏற்படும் துன்பம்), நினைந்தவர் புலம்பல் (தலைவனை நினைத்து புலம்புதல்), கனவுநிலை உரைத்தல் (பிரிவினால் தோன்றும் கனவு அனுபவங்கள்), மற்றும் பொழுது கண்டு இரங்கல் (காலத்தை எண்ணி வருந்துதல்) ஆகிய அதிகாரங்களாக வெளிப்படுகின்றன. இவ்வதிகாரங்கள் அனைத்தும் தலைவியின் உள்ளார்ந்த துயரத்தையும், அதே சமயம் அவளின் பொறுமை மற்றும் எதிர்நோக்கும் மனநிலையையும் ஒருங்கே வெளிப்படுத்துகின்றன. பிரிவின் வலியை அனுபவித்தாலும், அவள் காதலின் மீது கொண்ட நம்பிக்கையால் நிலைத்திருக்கும் தன்மை இப்பகுதியில் முக்கியமாக வலியுறுத்தப்படுகிறது. இதன் மூலம், வள்ளுவர் அகமரபில் பொறுத்திருத்தல் என்பது துன்பத்தின் வெளிப்பாடு மட்டுமல்லாது, மன உறுதி மற்றும் காதலின் நிலைத்தன்மையை வெளிப்படுத்தும் ஒரு உயர்ந்த உளவியல் நிலையாக அமைத்துள்ளார் என்பது தெளிவாகிறது.*

**வருந்துதல்**

*அகமரபில் பொறுத்திருத்தலுக்குப் பின் வரும் முக்கியமான நிலை வருந்துதல் ஆகும். இதில், தலைவனின் பிரிவால் தலைவியின் உடல் மற்றும் மனதில் ஏற்படும் தீவிரமான மாற்றங்கள் வள்ளுவரால் நுட்பமாக விவரிக்கப்படுகின்றன. இந்நிலையை உறுப்புநலன் அழிதல் (உடல் மெலிதல்), நெஞ்சோடு கிளத்தல் (தன் நெஞ்சுடன் உரையாடுதல்), நிறையழிதல் (உணர்ச்சி மிகுதியால் மனஅழுத்தம்), அவர்வயின் விதும்பல் (தோழியிடம் துயரை வெளிப்படுத்துதல்), மற்றும் குறிப்பறிவுறுத்தல் (தன்னிலையை உணர்ந்து வருந்துதல்) ஆகிய அதிகாரங்கள் பிரதிபலிக்கின்றன. இவ்வதிகாரங்கள் அனைத்தும் தலைவியின் உள்ளார்ந்த வேதனையின் பல்வேறு நிலைகளை வெளிக்கொணர்கின்றன. குறிப்பாக, தலைவன் இல்லாத சூழலில் அவள் மனம் நிலைதடுமாறி, தன் நெஞ்சோடு உரையாடும் அளவுக்கு உளவியல் சிதைவு ஏற்படுகிறது. இது அவளது காதலின் ஆழத்தையும், பிரிவின் தாக்கத்தையும் ஒருங்கே காட்டுகிறது. இவ்வாறு, வருந்துதல் நிலை என்பது வெறும் துயர வெளிப்பாடாக அல்லாது, மனித மனத்தின் உளவியல் அதிர்வுகளை வெளிப்படுத்தும் ஒரு முக்கிய கட்டமாக திருக்குறளில் அமைக்கப்பட்டுள்ளது.*

**ஊடல்**

*அகமரபில் வருந்துதல் நிலைக்குப் பின் ஊடல் எனும் காதல் சண்டை நிலை இடம்பெறுகிறது. இது தலைவனும் தலைவியும் இடையே நிகழும் நுண்ணிய உணர்ச்சி மோதலாகும். இந்நிலையை வள்ளுவர் புணர்ச்சி விதும்பல் (இன்பத்தில் ஊடலை விரும்பாமை), நெஞ்சோடு புலத்தல் (தலைவனின் ஊடலை நெஞ்சிடம் உரைத்தல்), புலவி (ஊடல் நீங்கி மீண்டும் இன்பம் அடைதல்), புலவி நுணுக்கம் (தலைவனின் ஊடல் மனநிலை), மற்றும் ஊடலுவகை (ஊடலின் பயன்கள்) ஆகிய அதிகாரங்களாக வகைப்படுத்துகிறார். இவ்வதிகாரங்கள் அனைத்தும் காதல் உறவின் உளவியல் இயக்கங்களை வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக, ஊடல் என்பது பிரிவினை உருவாக்கும் மோதல் அல்லாது, காதலின் ஆழத்தையும் பாசத்தின் வலிமையையும் வெளிப்படுத்தும் ஒரு நுண்ணிய உணர்ச்சி நிலையாகக் காணப்படுகிறது. இதனால், ஊடலில் தோற்றவர் காதலில் வென்றவர் எனும் வள்ளுவரின் கருத்து, காதலில் சமரசமும் புரிதலும் முக்கியமானவை என்பதை வலியுறுத்துகிறது.*

### பெண்ணிய பார்வையும் சமூக சூழலும்

திருவள்ளுவர் காமத்துப்பாலில் பெண்ணின் மனநிலையை மிக நுணுக்கமாகவும் மனிதநேய அடிப்படையிலும் வெளிப்படுத்தியுள்ளார். அவர் பெண்ணை வெறும் காதல் பொருளாக அல்லாது, உணர்ச்சி, அறிவு, நாணம் மற்றும் தன்னடக்கம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வடிவமாகக் காட்டுகிறார். பெண்ணின் காதல் வெளிப்பாடு பெரும்பாலும் நேரடியாக அல்லாது, கண் மொழி, குறிப்பு உணர்வு மற்றும் உளவியல் வெளிப்பாடுகளின் வழியாக சமூக நெறிகளுக்குள் அமைந்ததாகப் பதிவு செய்யப்படுகிறது. மேலும், சமூக சூழலில் அவளின் காத்திருப்பு, பொறுமை மற்றும் சமத்துவ உணர்வு ஆகியவை வள்ளுவரால் நயமாகக் காட்டப்படுகின்றன. இவ்வாறு, பெண்ணின் உணர்ச்சி உலகத்தை சமூக மரபுகளுடன் இணைத்து வெளிப்படுத்துவதன் மூலம், திருக்குறள் பெண்ணிய பார்வையை உயர்ந்த நெறியியல் மற்றும் உளவியல் அடிப்படையில் முன்வைக்கும் ஒரு சிறந்த இலக்கியமாகத் திகழ்கிறது.

### பெண்ணின் உணர்ச்சி

திருக்குறளின் காமத்துப்பாலில் பெண்ணின் உணர்ச்சி வெளிப்பாடு மிக நுணுக்கமான உளவியல் வடிவில் சித்தரிக்கப்பட்டுள்ளது. தலைவி தனது உள்ளார்ந்த காதல் உணர்வுகளை நேரடியாக வெளிப்படுத்தாமல், சமூக மரியாதை மற்றும் ஒழுக்க நெறிகளுக்கு உட்பட்டு, கண்களின் பார்வை வழியாக மட்டும் தலைவனுக்கே உணர்த்தும் வகையில் வெளிப்படுத்துகிறாள். இதனை

**ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்,**
**காதலால் கண்ணே உள.[2]** *(குறள் - 1099)*

என்ற குறள் தெளிவாக வெளிப்படுத்துகிறது. இக்குறளில், தலைவியின் கண் மொழி என்பது வெறும் பார்வை அல்லாது, அவளது உள்ளார்ந்த காதலின் வெளிப்பாடாக அமைந்துள்ளது. சமூக சூழலில் வெளிப்படையான காதல் உரையாடல் கட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலையிலும், அவள் தனது உணர்வுகளை நுட்பமான குறியீடுகளின் வழியாக வெளிப்படுத்துகிறாள். இதன் மூலம், பெண்ணின் மனத்தின் ஆழமும், அவளது உணர்ச்சி வெளிப்பாட்டின் நுணுக்கமும், சமூக நெறிகளுக்குள் அவள் வெளிப்படும் உளவியல் சிக்கல்களும் தெளிவாகப் புரிந்துகொள்ளப்படுகின்றன.

### காதலில் சமத்துவம்

திருக்குறளின் காமத்துப்பாலில் காதல் உறவு என்பது ஆணும் பெண்ணும் சமநிலை உணர்வும் பரஸ்பர மரியாதையும் கொண்ட உறவாக முன்வைக்கப்படுகிறது. இதில் ஒருவர்மேல் ஒருவர் ஆதிக்கம் செலுத்தும் நிலை அல்லாது, இருவரும் ஒரே அளவில் உணர்வைப் பகிர்ந்து கொள்ளும் சமத்துவக் காதல் சிந்தனை வலியுறுத்தப்படுகிறது. இதனை

**வீழும் இருவர்க் கினிதே வளியிடை**
**போழப் படாஅ முயக்கு.[3]** *(குறள் - 1108)*

என்ற குறள் தெளிவாக எடுத்துரைக்கிறது. இக்குறளில் காதல் அனுபவம் என்பது ஒருதரப்பின் அனுபவமாக அல்லாது, இருவரும் இணைந்து அனுபவிக்கும் சமமான உணர்வாகக் காட்டப்படுகிறது. இதன் மூலம், பெண் காதலில் சார்ந்தவளாகவோ கீழ்ப்படிந்தவளாகவோ அல்லாது, சம உரிமை கொண்ட பங்கேற்பாளராக விளங்குகிறாள் என்பது வள்ளுவரின் கருத்தாக வெளிப்படுகிறது. இவ்வாறு, திருவள்ளுவரின் காதல் சிந்தனை சமூகச் சமத்துவத்தையும் பாலின சமநிலையையும் அடிப்படையாகக் கொண்ட பெண்ணிய நோக்குடன் இணைந்து காணப்படுகிறது.

### பெண்ணின் காத்திருப்பு

சங்ககால சமூகச் சூழலில் பெண் தனது காதல் உணர்வுகளை நேரடியாக வெளிப்படுத்தும் சுதந்திரம் குறைவாக இருந்தது. இருப்பினும், அவளது உள்ளார்ந்த உணர்வுகள் மறைமுகமாக நுட்பமான வெளிப்பாடுகளின் வழியாக வெளிப்பட்டன. திருக்குறளில் இதனை

**மலரன்ன கண்டாள் அருமை அறியா**
**தலரெமக் கீந்ததிவ் வூர்.4** **(குறள் - 1142)**

என்ற குறள் மூலம் உணர்த்தப்படுகிறது. இக்குறளில் தலைவி, தலைவனின் பிரிவால் ஆழ்ந்த துயரத்தை அனுபவித்தாலும், தன் காதலை சமூகத்தில் வெளிப்படையாக வெளிப்படுத்தாமல் மரியாதையுடனும் தன்னடக்கத்துடனும் மனதிற்குள் அடக்கிக் கொள்கிறாள். அவளின் இந்தக் காத்திருப்பு நிலை, பெண்ணின் பொறுமை, நாணம் மற்றும் சமூக ஒழுக்கத்திற்கேற்ப தன்னை அமைத்துக்கொள்ளும் பண்பை வெளிப்படுத்துகிறது. இவ்வாறு, பெண்ணின் உணர்ச்சி வெளிப்பாடு கட்டுப்பாட்டுடனும் நுண்ணிய உளவியல் வெளிப்பாடுகளுடனும் அமைந்ததாக வள்ளுவர் சித்தரிக்கிறார். இதன் மூலம், பெண்ணின் காத்திருப்பு என்பது வெறும் துயர நிலை அல்லாது, சமூக நெறிகளுடன் இணைந்த உயர்ந்த பெண்ணிய பண்பாகவும் தன்னடக்கத்தின் வெளிப்பாடாகவும் விளங்குகிறது.

### திருவள்ளுவர் சுட்டிய களவு வாழ்வு

திருக்குறளின் காமத்துப்பால் பகுதி, காதல் வாழ்க்கையை அறநெறிக்குட்பட்ட ஒரு உயர்ந்த வாழ்வியல் வடிவமாக எடுத்துரைக்கிறது. இப்பகுதி வெறும் உடல் இன்பத்தை மட்டும் மையமாகக் கொள்ளாமல், மனநிலை, ஒழுக்கம், மரியாதை மற்றும் உண்மை காதல் ஆகியவற்றையும் ஒருங்கிணைத்து மனித உறவுகளை விளக்குகிறது. இதனை மணக்குடவர் விளக்கும்போது, ஒருவனுக்கு கலத்திற்கிடம் கன்னிகையர், கணிகையரும், பிறர் தாரமும் என மூவகை அல்லது இல்லை; அவற்றுள் பிறன்மனைக் கூட்டம் பாவம் தரும் என்று அறத்துப் பாலிற் கூறி, கணிகை கூட்டம் பொருட்கேடு தரும் என்று பொருட்பாலிற் கூறினார். அறமும் பொருளும் இன்பமும் வழுவாது வருவது கன்னியர் கூட்டம் எனத் தெரிவித்தார்.த என குறிப்பிடுகிறார். இவ்விளக்கம், காதல் மற்றும் இல்லற உறவுகள் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் சமநிலையுடன் இணைக்கும் விதமாக அமைந்துள்ளதை உணர்த்துகிறது. இதன் மூலம், பண்டைய தமிழர் சமூகத்தில் காதல் வாழ்க்கை ஒழுக்க நெறிகளுடன் இணைந்த ஒரு அறவழி வாழ்க்கைமுறையாகக் காணப்பட்டதாகவும் தெளிவாகிறது.

### களவு வாழ்வின் இயல்பு

திருவள்ளுவர் சுட்டிய காதல் வாழ்க்கை, சமூக ஒழுக்கத்திற்கும் இயற்கை மரபுக்கும் ஏற்ப அமைந்தது. தலைவன், தலைவியின் அழகை வர்ணித்து, அவளின் கண்ணோட்ட மொழியின் குறிப்பை அறிந்து புணர்ச்சி கொள்ளும் நிகழ்வு நடைபெறும்.

**குறிப்பே குறித்துக் கொள்ளும் ஆயின்,**
**அங்கு இவை நிகழும் என்மனார் புலவர்.[7]** **(தொல்-நூற்- 94)**

என்ற தொல்காப்பியச் சூத்திரம், குறிப்பறிதலின் மூலம் காதல் உருவாகும் கலவியல் வாழ்க்கையை உறுதிப்படுத்துகிறது. அதனால், குறிப்பறிதல் அதிகாரத்திற்கு அடுத்ததாக புணர்ச்சிமகிழ்தல் அதிகாரம் வருவது, சங்க இலக்கிய மரபுடன் ஒத்திணைந்ததாகும்.

### காதல் வெளிப்பாடு மற்றும் சமூக சூழல்

காதல் வெளிப்பாடு மற்றும் சமூக சூழல் என்பது அகமரபில் காதல் உறவின் வெளிப்படையான நிலையைச் சுட்டும் முக்கியமான கட்டமாகும். தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே உருவாகும்

காதல் முதலில் பகற்குறி மற்றும் இரவுக்குறி போன்ற மறைமுகச் சந்திப்புகளின் வழியாக வெளிப்படுகிறது. இவ்வாறு மறைமுகமாக வளர்ந்த காதல் சமூகத்தில் பரவத் தொடங்கும் போது, ஊரார் பேசும் நிலையும் நிந்தனைச் சூழலும் உருவாகின்றன. இத்தகைய சமூக எதிர்வினைகளுக்கு இடையிலும் தலைவன் தன் காதலில் உறுதியை வெளிப்படுத்துகிறான்.

**தாம்வேண்டின் நல்குவார் காதலர் யாம்வேண்டும்**
**கௌவை எடுக்குமிவ் வூர்.**[8] *(குறள் - 1150)*

என்ற குறளில், சமூகக் கருத்துக்களையும் விமர்சனங்களையும் பொருட்படுத்தாமல் தன் காதலை நிலைநிறுத்தும் மனவலிமை வெளிப்படுகிறது. இதன் மூலம், தனிப்பட்ட காதல் உணர்வு சமூக அழுத்தத்தையும் மீறி தன்னிச்சையாக நிலைபெறுவதைக் காட்டுகிறது.

### மடல் ஏறுதல் மற்றும் உடன்போக்கு

மடல் ஏறுதல் மற்றும் உடன்போக்கு என்பது காதல் வெளிப்படையாக ஊராரால் அறியப்பட்ட பின்னர் உருவாகும் இரண்டு முக்கிய அகமரபுச் செயல்பாடுகளாகும். தலைவன், சமூக நிந்தனையும் பெற்றோர் எதிர்ப்பும் அதிகரிக்கும் சூழலில் தன் காதலை வெளிப்படுத்தும் மனஅழுத்த நிலையில் மடல் ஏறுதல் எனும் நிலையை அடைகிறான். இது காதலின் தீவிரத்தையும் சமூக அழுத்தத்தின் எதிரொலியையும் ஒருங்கே காட்டும் ஒரு உளவியல்-சமூக வெளிப்பாடாகும். இதனை திருக்குறளின் *1132, 1133* மற்றும் *1136* ஆகிய குறள்கள் சுட்டுகின்றன. இதன் தொடர்ச்சியாக, பெற்றோர் மற்றும் சமூகத்தின் எதிர்ப்பினால் காதல் உறவு அதிகாரப்பூர்வமாக ஏற்கப்படாத சூழலில் உடன்போக்கு எனப்படும் நிலை உருவாகிறது. இதில் காதலர்கள் சமூக அனுமதியின்றி இணைந்து வாழ்வதோ, பின்னர் குடும்பங்களின் சம்மதத்துடன் திருமணம் செய்து சமூக அங்கீகாரம் பெறுவதோ நிகழ்கிறது. இதன் மூலம் தனிப்பட்ட காதல் சமூக ஒழுங்குடன் சமரசம் அடைகிறது. உடன்போக்கு செல்லும் காதலர், ஊர் திரும்பி, தலைவன் வீட்டிலோ தலைவி வீட்டிலோ திருமணம் செய்தல் உண்டுதூ என்ற விளக்கம் இதனை உறுதிப்படுத்துகிறது. இவ்வாறு, ஆரம்பத்தில் மறைமுகமாகத் தோன்றிய களவு வாழ்வு இறுதியில் திருமண உறவாக உருமாறுவதால், அது சமூக ஒழுக்கத்திற்குட்பட்டதாகவும் அறநெறி வழியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாழ்வியல் வடிவமாகவும் நிலைபெறுகிறது.

### உளவியல் பார்வை

உளவியல் என்பது மனிதனின் இயல்பினை ஆராய்வது ஆகும் என எல். எப். போரிங் குறிப்பிடுகிறார்ணீ. மனித மனம் துன்பம், ஏமாற்றம் போன்ற சூழல்களில் இருந்து வெளிவர சில தற்காப்பு உத்திகளை (defense mechanisms) பின்பற்றுவதாக உளவியலாளர்கள் கூறுகின்றனர். அதேபோல், திருவள்ளுவரும் காமத்துப்பாலில் தலைவனின் பிரிவால் வேதனை அடையும் தலைவி தன்னுடைய மனநிலையை சமநிலைப்படுத்திக் கொள்ளப் பல உளவியல் உத்திகளை மேற்கொள்கிறாள் என்பதைப் புலப்படுத்துகிறார்.

### மகிழ்ச்சி

புணர்ச்சி மகிழ்தல் அதிகாரத்தில், தலைவனும் தலைவியும் இடையே நிகழும் புணர்ச்சியின் ஆனந்த நிலையை வள்ளுவர் வெளிப்படுத்துகிறார். அதே நேரத்தில், புணர்ச்சி விதும்பல் அதிகாரத்தில், தலைவி தன் காதலில் பொறுமையையும் மன்னிப்பையும் வெளிப்படுத்தும் நேர்மறை (ணீணிண் டிஞுடிதிநு) மனப்பாங்கை காட்டுகிறாள். இவை அனைத்தும் மனதின் உளவியல் தற்காப்பு வழிமுறைகள் எனலாம். அதனை உறுதிப்படுத்தும் வகையில், நினைந்தவர் விதும்பல் அதிகாரத்தில் வள்ளுவர்

***எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்***
***நினைப்ப வருவதொன் றில்.[11]*** ***(குறள் - 1202)***

*இக்குறளில், தலைவி தன் தனிமையை வேதனையாக அல்லாது ஒரு இனிமையான நினைவாக மாற்றி ரசிக்கிறாள். இது துன்பத்தை மகிழ்ச்சியாக மாற்றும் மனநிலை - ஒரு முக்கியமான உளவியல் தற்காப்பு வடிவம் ஆகும்.*

***கனவு***

*நினைவில் நிறைவேறாத ஆசைகள், உணர்வுகள் கனவில் நிறைவேறுவது மனித மனத்தின் இயற்கையான நிகழ்வாகும். இதனை வள்ளுவர் கனவுநிலை உரைத்தல் அதிகாரத்தில் அழகாக வெளிப்படுத்துகிறார்*

***நனவினான் நல்கா திரைக்கதை கனவினால்***
***காண்டலின் உண்டென் உயிர்.[12]*** ***(குறள் - 1213)***

*இந்தக் குறளில் தலைவி, தலைவனை கனவில் சந்தித்து தன் மனதின் குறைவினை பூர்த்தி செய்கிறாள். இது ஃப்ராய்டின் கனவியல் உளவியல் கருத்துகளுடன் ஒத்துப் போகிறது - அதாவது, அறியாமை, மனதில் ஒடுக்கப்பட்ட ஆசைகள் கனவில் வெளிப்படுகின்றன என்பது போன்று.*

***தற்காப்பு***

*தலைவன் பிரிந்த நிலையிலும், தலைவி தன் துயரை வெளிப்படுத்தும் வழியாக தன்னை தற்காத்துக் கொள்கிறாள். அவள் தலைவனை திட்டுகிறாள், தன் நெஞ்சுடன் பேசுகிறாள், தன் கண்களையும் புலன்களையும் கண்டிக்கிறாள். இத்தகைய வெளிப்பாடுகள் அனைத்தும் ஒரு தற்காப்பு உளவியல் நடவடிக்கை ஆகும். அவள் தன் வலியை வெளிப்படுத்துவதன் மூலம் மன அழுத்தத்திலிருந்து விடுபடுகிறாள். இது உணர்வை வெளிப்படுத்தி நிம்மதி அடைதல் எனப்படும்* Catharsis *(உளச்சமநிலை அடையும் நிகழ்வு) என உளவியலில் விளக்கப்படுகின்றது.*

***பகுத்தறிவு***

*காதல் வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களுக்கு அமைதியாகவும் அறிவுடன் தீர்வு காண வேண்டும் என்பதை வள்ளுவர் உணர்த்துகிறார். மனதை ஒருநிலைப்படுத்தி பகுத்தறிந்து சிந்தித்தால், காதல் உறவு நீடிக்கும் என்பது அவரின் செய்தி. அதை வள்ளுவர் ஒரு அழகான உவமையால் விளக்குகிறார் உணவுக்கு உப்பு எவ்வளவு அவசியமோ, அதேபோல் ஊடல் காதலுக்குத் தேவையானது. ஆனால், உணவில் உப்பு அதிகமானால் சுவை மாறிவிடும். அதுபோல், காதலிலும் ஊடல் அளவுக்கு மீறினால் நெருக்கம் குன்றும். புலவி என்னும் அதிகாரத்தில் இதனை*

***உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது***
***மிக்கற்றால் நீள விடல்[13]*** ***(குறள்-1302)***

*இதன் மூலம், வள்ளுவர் எதிர்பார்ப்பு, உணர்வு கட்டுப்பாடு, சமநிலை ஆகியவற்றை வலியுறுத்துகிறார். இவை அனைத்தும் மனநிலை சமநிலையை பேணும் உளவியல் கூறுகள் ஆகும்.*

***நிறைவுறை***

*திருக்குறளின் காமத்துப்பாலில் கூடல், பிரிதல், பொறுத்திருத்தல், வருந்தல் மற்றும் ஊடல் ஆகிய அகமரபின் அடிப்படை உணர்வுகள் தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் வெளிப்படுகின்றன. இவ்வுணர்வுகள் வெறும் காதல் நிகழ்வுகளாக அல்லாது மனித மனத்தின் இயல்பான உளவியல் இயக்கங்களாகவும் சமூக ஒழுக்கத்துடன் இணைந்த வாழ்வியல் அனுபவங்களாகவும் வடிவமைக்கப்*

பட்டுள்ளன. திருவள்ளுவர் பெண்ணை காதல் உறவின் பொருளாக மட்டுமன்றி, ஆழமான உணர்ச்சி, அறிவாற்றல், நாணம் மற்றும் தன்னடக்கம் ஆகியவற்றை ஒருங்கே கொண்ட சுயமரியாதைமிக்க மனிதராகக் காட்டுகிறார். இதன் மூலம் பெண்ணின் உள்ளார்ந்த மனநிலையும் சமூகச் சூழலுக்கேற்ப அவள் வெளிப்படுத்தும் நுணுக்கமான உணர்வுகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. மேலும், காமத்து ப்பால் உடல் இன்பத்தை மையமாகக் கொண்டதாக இல்லாமல், மனப்பாசம், பரஸ்பர மரியாதை, நெறிப்படி நடத்தை மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றை முன்னிறுத்தி அறநெறியுடனான காதலை உயர்ந்த வாழ்வியல் கோட்பாடாக நிறுவுகிறது. இந்நிலையில், மனித உணர்வுகளின் உளவியல் இயக்கங்கள்-துன்பம், ஏக்கம், நினைவு, கனவு மற்றும் தற்காப்பு மனநிலைகள்-மிக நுட்பமாக வெளிப்படுகின்றன.

இதனால், திருக்குறள் அகமரபுச் சிந்தனைகளின் வெளிப்பாடாக மட்டுமன்றி, பெண்ணிய பார்வையும் உளவியல் அடிப்படையும் ஒருங்கே இணைந்த ஒரு உயர்ந்த மனிதநேய இலக்கியமாகத் திகழ்கிறது. உலகளாவிய அளவில் மனித உறவுகளின் மெய்ப்பொருளை எடுத்துரைக்கும் தத்துவ நூலாக திருக்குறள் தனித்த இடத்தைப் பெறுகிறது.ஏற்பளிப்பு

## ஆய்வின் வெளிப்பாடு

1. திருக்குறளின் காமத்துப்பால் பகுதியில் அகமரபின் அடிப்படை கூறுகள் - கூடல், பிரிதல், பொறுத்திருத்தல், வருந்தல், ஊடல் - ஆகியவை தெளிவாக வெளிப்பட்டுள்ளன.
2. வள்ளுவர், அக இலக்கியத்தின் உணர்ச்சி மரபை அறநெறி, பெண்ணிய பார்வை மற்றும் சமூக ஒழுக்கத்துடன் இணைத்து, அதனை உயர்ந்த வாழ்வியல் சிந்தனையாக மாற்றியுள்ளார்.
3. தலைவி மற்றும் தலைவனின் உறவுகளின் வழி மனித மனத்தின் உளவியல் இயக்கங்கள் வெளிப்படுகின்றன; இதன் மூலம் அக இலக்கிய மரபு நவீன உளவியல் நோக்குடன் இணைக்கப்படுகிறது.
4. எனவே, இவ்வாய்வு திருக்குறளில் அகமரபுச் சிந்தனைகள் வெளிப்படும் விதம் முழுமையாக நிறைவேறியுள்ளது; வள்ளுவர் அக இலக்கியத்தின் சாரத்தை அறநெறி வழி புதிய உயரத்தில் நிலைநிறுத்தியுள்ளார்.

## நன்றி

தென்கொரியாவில் நடைபெற்ற முதல் உலகளாவிய திருக்குறள் (08/11/2025) மாநாட்டில் இக்கட்டுரை சமர்ப்பிக்க அனுமதி வழங்கிய தென்கொரியா தமிழ் ஆராய்ச்சி அமைப்பிற்கு (SKTRA) எனது மனமார்ந்த நன்றி..

## சான்றெண் விளக்கம்


1. அகப்பொருள் விளக்கம்- நாற்கவி ராசா நம்பி- ஒழிபியல்- பக்கம்-311
2. திருக்குறள் கலைஞர் உரை- குறள் எண்- 1099 ப. எண்:224
3. மேற்படி நூல், குறள் எண்: 1108 ப. எண்:226
4. மேற்படி நூல், குறள் எண்: 1142 ப. எண்:233
5. வன்மீகநாதன்.( தொகுப்பாள்) திருக்குறள்- உரைக்கொத்து காமத்துப்பால், பக்.9-10
6. சுப்புரெட்டியார் என். தொல்காப்பியர் காட்டும் வாழ்க்கை- தொகுதி 1 வேதத்தை மறை நூல் என்று சொல்லுவதுபோலவே அறநில வழுவாமல் காதலர்கள் கரந்து ஒழுகும் இதனைக் களவு என்று பண்டையோர் குறித்துள்ளனர் என்பதை அறிதல் வேண்டும் ப.எண்:89

7. தொல்காப்பியம் பொருள் அதிகாரம் காதற் குறிப்பு- நூற்பா- 94 ப.எண்- 100
8. திருக்குறள் கலைஞர் உரை- குறள் எண்:1150 -ப.எண்: 234
9. சுப்பிரமணியம் கா, சங்ககாலசமுதாயம் ப. எண்:41
10. கல்வி உளவியல்- ப. எண்:5
11. திருக்குறள் கலைஞர் உரை- குறள் எண்:1202 -ப.எண்: 245
12. மேற்படி நூல், குறள்:1213 ப. எண்:247
13. மேற்படி நூல்,குறள் எண்: 1302 ப. எண்:265

**துணைநின்ற நூல்கள்**

1. முனைவர் இரா. சுதமதி- அகப்பொருள் விளக்கம்- நாற்கரசன நம்பி- நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்., 41-ஆ சிக்கு இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர் சென்னை- 600098. நான்காம் பதிப்பு: நவம்பர், 2017 தொலைபேசி எண்:26258410
2. திருக்குறள் கலைஞர் உரை- கலைஞர் மு கருணாநிதி- பூம்புகார் பதிப்பகம் 127(ப.எண்.63), பிரகாசம் சாலை (பிராட்வே) சென்னை-600108 பதிப்பு: டிசம்பர், 2007 தொலைபேசி எண்:25267543
3. மோகனராசு கு, - குடும்பச் சிக்கல்களும் திருவள்ளுவர் தரும் தீர்வுகளும் மாணிக்கவாசகர் பதிப்பகம் பாரிமுனை, சென்னை 108 முதற்பதிப்பு: 2011
4. சுப்புரெட்டியார். -தொல்காப்பியர் காட்டும் வாழ்க்கை- தொகுதி -1 உள்ளகரம் சென்னை-1 முதல் பதிப்பு 2010
5. பேராசிரியர் ச திருஞானசம்பந்தம்- தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும் - கதிர் பதிப்பகம் 93 தெற்கு வீதி திருவையாறு-613204. முதற்பதிப்பு: மார்ச், 2018 தொலைபேசி எண்: 9443190379
6. சுப்பிரமணியம் கா - சங்ககால சமுதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை மூன்றாம் பதிப்பு - 2010
7. முனைவர் அ. வென்சஸ் சிரில், திரு. தே. ஜெயசேகரன் - கல்வி உளவியல் - Mithra Dev Publication Pvt. Ltd., 1/36, School Street, Pernaickenpatti, Sithurajapuram Post, Sivakasi & 626189, Virudhunagar Dist., முதல் பதிப்பு: ஜனவரி, 2022